DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 225 of 2024 |
| Deposition of witness for | : | PW10 |
| Name | : | குமார் |
| Father's Name | : | எல்லப்பன் |
| Village | : | லக்கபெத்தனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கூலி வேலை |
| Age | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 08th day of April 2026.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் தற்போது லக்கபெத்தனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சண்முகம் எனக்கு அண்ணன் உறவு முறை ஆவார். கடந்த 30.12.2019 ஆம் தேதி மாலை சுமார் 06.45 – 07.00 மணியளவில் வீட்டில் இருந்தேன். எனது அண்ணாவிற்கு விபத்து ஏற்பட்டதாக கிராமத்தில் இருந்த நபர்கள் சொன்னார்கள். குந்தப்பள்ளி கிராமத்தில் பஞ்சாயத்து தேர்தல் நேரம். தேர்தல் விஷயமாக கந்தன், சண்முகம், ராமலிங்கம், முனிரத்தினம் ஆகியோர் செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். சென்னசந்திரம் முத்து என்பவரது நிலத்தின் அருகில் விபத்து ஏற்பட்டதாக சொன்ன தகவலின் பெயரில் நானும், கோடீஸ்வரன் என்பவரும் சம்பவ இடத்திற்கு சென்றோம். சண்முகத்திற்கு தலை மற்றும் மார்பில் அடிபட்டிருந்தது, மற்றும் அவருடன் வந்த கந்தன் என்பவருக்கு தலையில் அடிபட்டிருந்தது மற்றும் இராமலிங்கம், முனிரத்தினம் ஆகியோருக்கு காலில் இரத்த காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர், ஆம்புலன்ஸ் மூலமாக நாங்கள் சண்முகம் மற்ற மூவரையும் அனுப்பி வைத்தோம். பின்னர் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மேற்படி விபத்தில் சண்முகம் இறந்து விட்டதாக தகவல் கேள்விப்பட்டோம். மறுநாள் மதியம் 02.00 மணியளவில் குருபரப்பள்ளி

போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விபத்து குறித்து படம் வரைந்தார்கள். அதில் நானும் கோடீஸ்வரன் என்பவரும் கையெழுத்து போட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நானும், விபத்தில் இறந்துபோனவரும் ஒரே ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். இறந்துபோனவர் எனக்கு அண்ணன் முறை என்றால் சரிதான். மாலை 06.30 மணிக்கு எனக்கு தகவல் கிடைத்தது, 07.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன். 07.30 – 08.00 மணிக்குள் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். சம்பவ இடத்திற்கு நானும், எனது தம்பி கோடீஸ்வரனும் சென்றோம். கோடீஸ்வரன் எனது பெரியப்பா மகன் ஆவார். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்குள் நிறைய கூட்டம் சேர்ந்து விட்டது என்றால் ஆமாம். நானும் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவர் பரிசோதனை செய்து விட்டு வழியில் இறந்து விட்டதாக சொல்லி விட்டார் என்றால் ஆமாம். அந்த வருத்தத்தில் நான் அரசு மருத்துவமனையிலேயே இருந்து விட்டேன் என்றால் ஆமாம். நான் இரவு 12.00 மணிக்கு வீட்டிற்கு கிளம்பி விட்டேன். மறுநாள் மாலை 04.00 மணிக்கு பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை எடுத்து வந்தார்கள். இறந்துபோனவர் அண்ணார் என்பதால் புதைப்பதற்கான ஈமச்சடங்குகளை செய்வதற்காக அங்கேயே இருந்து விட்டேன் என்றால் சரிதான். அடக்கம் செய்வதற்கு இரவு 08.00 மணி ஆகி விட்டது. மறுநாள் போலீசார் சம்பவ இடத்திற்கு கூப்பிட்டது மதியம் 01.00 – 02.00 மணி இருக்கும். நானும், எனது தம்பியும் சென்றோம். அங்கு சுமார் 10 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் ஆமாம். அவர்களை விட்டு விட்டு என்னிடமும், எனது தம்பியிடமும் தான் பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஆமாம். பேப்பரில் என்ன எழுதி உள்ளார்கள் என்று தெரியாது என்றால் கூப்பிட்டதால் சம்பவ இடத்திற்கு சென்றேன், கையெழுத்து போடச் சொன்னார்கள் போட்டேன். என்னிடம் சொன்ன விஷயத்தை தான் எனது தம்பி கோடீஸ்வரனிடம் சொல்லி கையெழுத்து பெற்றார்கள் என்றால் ஆமாம்.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 225 of 2024 |
| Deposition of witness for | : | PW11 |
| Name | : | கோடீஸ்வரன் |
| Father's Name | : | சுந்தரம் |
| Village | : | லக்கபெத்தனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கூலி வேலை |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 08th day of April 2026.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது லக்கபெத்தனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சண்முகம் எனக்கு அண்ணன் உறவு முறை ஆவார். கடந்த 30.12.2019 ஆம் தேதி மாலை சுமார் 06.45 – 07.00 மணியளவில் வீட்டில் இருந்தேன். எனது அண்ணாவிற்கு விபத்து ஏற்பட்டதாக எனது நண்பர் சொன்னார். குந்தப்பள்ளி கிராமத்தில் பஞ்சாயத்து தேர்தல் நேரம். தேர்தல் விஷயமாக கந்தன், சண்முகம், ராமலிங்கம், முனிரத்தினம் ஆகியோர் செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். சென்னசந்திரம் முத்து என்பவரது நிலத்தின் அருகில் விபத்து ஏற்பட்டதாக சொன்ன தகவலின் பெயரில் நானும், குமார் என்பவரும் சம்பவ இடத்திற்கு சென்றோம். சண்முகத்திற்கு தலை மற்றும் மார்பில் மற்றும் கையில் அடிபட்டிருந்தது, மற்றும் அவருடன் வந்த கந்தன் என்பவருக்கு கை மற்றும் தலையில் அடிபட்டிருந்தது மற்றும் இராமலிங்கம், முனிரத்தினம் ஆகியோருக்கு கால் மற்றும் தொடையில் இரத்த காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர், ஆம்புலன்ஸ் மூலமாக நாங்கள் சண்முகம் மற்ற மூவரையும்

அனுப்பி வைத்தோம். பின்னர் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மேற்படி விபத்தில் சண்முகம் இறந்து விட்டதாக தகவல் கேள்விப்பட்டோம். மறுநாள் மதியம் 02.00 மணியளவில் குருபரப்பள்ளி போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விபத்து குறித்து படம் வரைந்தார்கள். அதில் நானும் குமார் என்பவரும் கையெழுத்து போட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

குமார் எனது அண்ணன் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன சண்முகம் எனக்கு அண்ணன் உறவு முறை என்றால் சரிதான். நானும், குமாரும் சம்பவ இடத்திற்கு போலீசார் கூப்பிட்ட உடன் ஒன்றாக சென்றோம் என்றால் சரிதான். மதியம் 01.00 – 02.00 மணிக்கு போலீசார் கூப்பிட்டனர். அங்கு செல்லும்போது சுமார் 15 பேர் இருந்திருப்பார்கள். அவர்கள் பக்கத்தில் இருப்பவர்கள், எங்கள் ஊர்க்காரர்கள் அல்ல. அவர்களிடம் கையெழுத்து வாங்காமல் என்னிடமும், குமாரிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஆமாம். கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

M SANTHI
CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.